# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7934/F/2024**

திரு.வெ.ராஜீ .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர்
(வீட்டுவசதி) அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
சேலம் மண்டலம், கிழக்கு கார்டன் தெரு,
பேர்லேண்ட்ஸ், சேலம்-636016.

## ஆணை

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.வெ.ராஜீ அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.ர.சித்திக் அலி, கூட்டுறவு சார்பதிவாளர் (வீட்டுவசதி), துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், சேலம் மண்டலம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 27/03/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் சேலம் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ.S-1329-ன் 2010 ஆண்டு முதல் 2023-ம் ஆண்டு வரை இறுதி தணிக்கை

அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட அலுவலர் ஆகிய விவரங்கள் என்பன போன்ற தகவல்களைக் 10 இனங்களில் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 05.04.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 06.04.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 18.04.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 14.06.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 05.04.2024 மற்றும் 03.06.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு உரிய தகவல்கள் 05.04.2024 மற்றும் 03.06.2024 நாளிட்ட கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7934/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம்,
சேலம் மண்டலம், கிழக்கு கார்டன் தெரு,
பேர்லேண்ட்ஸ், சேலம்-636016.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.வெ.ராஜீ,
148 செங்கல்பேட்டை,
நரஜோதி பட்டி கிராமம்,
சேலம்-636004.

Copy to file: KR/PA

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005